22.03.16

தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**மூன்று கன்றுகளை ஈன்ற பசு**

பொள்ளாச்சி அருகே பசு மூன்று கன்றுகளை ஈன்றுள்ளது.

கோவை மாவட்டம், பொள்ளாச்சியை அடுத்த குருநல்லிபாளையத்தைச் சேர்ந்தவர் சக்திவேல். இவர், அங்குள்ள தோட்டத்து வீட்டில் வசித்து வருகிறார். இந்நிலையில், இவர் வளர்த்து வரும் பசு கருத்தரித்திருந்த நிலையில், திங்கள்கிழமை 3 காளைக் கன்றுகளை ஈன்றது. இந்தப் பசுவையும், கன்றுகளையும் அப்பகுதி பொதுமக்கள் ஆர்வத்துடன் பார்த்துச் செல்கின்றனர்.

## ஜேடர்பாளையம் படுகையணையில் இருந்து ராஜா வாய்க்காலுக்கு தண்ணீர் திறப்பு: விவசாயிகள் மகிழ்ச்சி

பரமத்தி வேலூர் வட்டம், ஜேடர்பாளையம் படுகையணையில் இருந்து பிரியும் ராஜா வாய்க்கால் பராமரிப்புப் பணிக்காக கடந்த 1-ஆம் தேதி தண்ணீர் நிறுத்தப்பட்டது. பராமரிப்புப் பணிகள் நிறைவு பெற்ற நிலையில், ஞாயிற்றுக்கிழமை விவசாயிகள் முன்னிலையில் தண்ணீர் திறக்கப்பட்டது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

ஒவ்வொரு வருடமும் மார்ச் மாதம் 1-ம் தேதி ராஜா வாய்க்காலில் பராமரிப்பு பணிக்காக 15 நாள்கள் தண்ணீர் நிறுத்தப்படுவது வழக்கம். வாய்க்கால் பராமரிப்புப் பணிக்காக தண்ணீர் நிறுத்துவது குறித்தும், பராமரிப்புப் பணிகள் மேற்கொள்வது குறித்தும் கடந்த மாதம் 29-ம் தேதி விவசாயிகளிடையே ஆலோசனை செய்யப்பட்டது.

அதன்படி, மார்ச் 1-ம் தேதி முதல் ராஜா வாய்க்காலில் தண்ணீர் நிறுத்தம் செய்யப்பட்டு, பராமரிப்புப் பணிகள் நடைபெற்று வந்தன. இந்த

நிலையில், பராமரிப்புப் பணிகள் முழுமையாக நிறைவடையாத நிலையில், மீண்டும் விவசாய சங்கப் பிரதிநிதிகளுடன் ஆலோசனை நடத்தப்பட்டது. இதில் வரும் 19-ம் தேதிக்குள் ராஜா வாய்க்காலில் பராமரிப்புப் பணிகள் முடிக்கப்பட்டு, மார்ச் 20-ம் தேதி காலை மீண்டும் ராஜா வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்க முடிவு செய்யப்பட்டது.

அதன்படி, ஞாயிற்றுக்கிழமை ராஜா வாய்க்கால் பாசன விவசாய சங்கங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள், விவசாயிகள் மற்றும் பொதுப்பணித் துறையினர் ஆகியோர் ராஜா வாய்க்காலில் தண்ணீரை திறந்து வைத்தனர். இந்த வாய்க்காலில் தண்ணீர் திறந்து விடப்பட்டதால் வாழை, வெற்றிலை, நெல், கரும்பு, மஞ்சள், கோரை உள்ளிட்ட பயிர்களைப் பயிர் செய்துள்ள விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## நெய்வேலியில் 2 லட்சம் மரக்கன்றுகள் நட இலக்கு:என்எல்சி தலைவர்

நெய்வேலி நகரியத்தை மேலும் பசுமையாக்கும் வகையில் நடப்பாண்டில் 2 லட்சம் மரக்கன்றுகள் நடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக என்எல்சி தலைவர் சரத்குமார் ஆச்சார்யா தெரிவித்தார்.

என்எல்சி சுற்றுச்சூழல் துறை சார்பில், நெய்வேலி கேந்திரிய வித்யாலயா பள்ளியில் உலக வனதினம் திங்கள்கிழமை கொண்டாடப்பட்டது. இதையொட்டி, என்எல்சி தலைவர் சரத்குமார் ஆச்சார்யா தலைமையில் மரக்கன்றுகள் நடும் விழா நடைபெற்றது.

நிகழ்ச்சியில், இயக்குநர்கள் சுபீர்தாஸ், வி.தங்கபாண்டியன், பி.செல்வகுமார், மனித வளத்துறை செயல் இயக்குநர் என்.முத்து மற்றும் என்எல்சி அதிகாரிகள் பங்கேற்று பள்ளி வளாகத்தில் மரக்கன்றுகளை நட்டனர்.

நிகழ்ச்சியில் சரத்குமார் ஆச்சார்யா பேசுகையில், ஆறுகளின் கரைகளில் மனித நாகரிகம் வளர்ந்தபோது மரங்கள் முக்கியப் பங்கு வகித்தன.

ஆனால் இன்று நாகரிகம் வளர்வதற்காக மரங்கள் அழிக்கப்பட்டு, புவி வெப்பமயமாதல் போன்ற பல பக்க விளைவுகளை சந்தித்து வருகிறோம். இதனை சரிசெய்ய மேற்கொள்ள வேண்டிய முக்கிய நடவடிக்கை மரக்கன்றுகள் நடுவதே ஆகும். அந்த வகையில், இந்த ஆண்டில் 2 லட்சம் மரக்கன்றுகள் நடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

அனைவரும் ஒத்துழைப்பு வழங்கினால் இத்திட்டம் வெற்றியடையும் என்றார் அவர்.

மேலும், பூச்செடிகள், பழமரங்கள், நிழல் தரும் மரங்கள் மற்றும் மூலிகைத் தாவரங்களை ஒருங்கிணைந்து வளர்க்கும் வகையில் ஒரு திட்டத்தை உருவாக்குமாறு ஆச்சார்யா கேட்டுக்கொண்டார்.

அதனைத் தொடர்ந்து நெய்வேலி 2ஆவது சுரங்கத்தில் நடைபெற்ற நிகழ்வில், சுமார் 4 ஏக்கரில் 600 செம்மரக்கன்றுகள் நடப்பட்டன. மேலும் 12 ஏக்கரில் செம்மரக்கன்றுகள் நடத் திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. நிகழ்ச்சியில், சுற்றுச்சூழல் துறை துணைப் பொது மேலாளர் நாகராஜன் நன்றி கூறினார்.

## போராட்டம் நடத்த 200 விவசாயிகள் தில்லி பயணம்

நதிகள் இணைப்பு, கடன் தள்ளுபடி உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, புது தில்லியில் பிரதமர் மற்றும் வேளாண் துறை அமைச்சர் இல்லம் முன்பு போராட்டம் நடத்த திருச்சியிலிருந்து சுமார் 200 பேர் திங்கள்கிழமை ரயிலில் புறப்பட்டுச் சென்றனர். விவசாயிகளின் விளைபொருள்களுக்கு லாபகரமான விலையை அறிவிக்க வேண்டும், கூட்டுறவு சங்கங்கள், வங்கிகளில் விவசாயிகள் பெற்ற கடன்களைத் தள்ளுபடி செய்ய வேண்டும், விவசாய நகைகளை ஏலம் விடக்கூடாது என்ற கோரிக்கைகளை வலியுறுத்தி தேசிய- தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்கத்தின் சார்பில் புது தில்லியில் மார்ச் 23-ம் தேதி முதல் போராட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இப்போராட்டத்தில் பங்கேற்பதற்காக சங்கத்தின் தலைவர் பி. அய்யாக்கண்ணு தலைமையில், சங்கத்தின் பொதுச் செயலர் சி. பழனிவேலு, பொருளாளர் என்.கார்த்திகேயன், சட்ட ஆலோசகர் எஸ். முத்துகிருஷ்ணன் உள்ளிட்ட சுமார் 200 விவசாயிகள் திங்கள்கிழமை காலை வைகை அதிவிரைவு ரயில் மூலம் திருச்சியிலிருந்து சென்னை புறப்பட்டுச் சென்றனர். அங்கிருந்து ரயில் மூலம் அவர்கள் புது தில்லி செல்கின்றனர்.

முன்னதாக, ரயில் நிலையத்தில் சங்கத் தலைவர் பி. அய்யாக்கண்ணு கூறியதாவது: எங்களது கோரிக்கை நிறைவேறும் வரை தொடர்ந்து புது தில்லியிலே இருந்து போராட்டம் நடத்த உள்ளோம். பிரதமர் இல்லம், மத்திய வேளாண் அமைச்சர் இல்லம் உள்ளிட்டவை முன்பு போராட்டம் நடத்தத் திட்டமிட்டுள்ளோம். இப்போராட்டத்தில் பங்கேற்கும் விவசாயிகளுக்குத் தேவையான துணிமணிகள், சமையலுக்குத் தேவையான பொருள்களையும் கொண்டு செல்கிறோம். எங்கள் கோரிக்கைகளை அரசு உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்றார் அவர்.

ரயிலில் செல்வதற்கு முன்பு ரயில் நிலையம் நுழைவுவாயில் மற்றும் நடைமேடை பகுதியில் கழுத்தில் கோரிக்கை அட்டைகளை மாட்டிக் கொண்டு முழக்கங்களை விவசாயிகள் எழுப்பினர்.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### சர்க்கரையை விட இனிப்பா

சில பெயர்கள் விஞ்ஞான உலகில் பொருத்த மில்லாமல் அமைந்து விடுகின்றன. சர்க்கரைக்கு பதிலாக இனிப்புச்சுவை மிகுந்த ஸ்டீவியா ரீபாடியானா பயன்படுத்தப்படுகிறது. இந்த ஸ்டீவியா சூரியகாந்தி

குடும்பத்தைச் சேர்ந்தது. ஆனால் எத்தகைய தொடர்பும் இல்லாத துளசியோடு ஸ்டீவியாவை தொடர்புபடுத்தி இனிப்புத்துளசி என தமிழில் கூறுகிறோம்.

ஸ்டீவியாவின் இலையில் இருந்து தனியே பிரித்தெடுக்கப்படும் ஸ்டீவியோசைடு என்ற உயிரிவேதிப் பொருள் சர்க்கரையை விட 250 மடங்கு இனிப்புள்ளது.

## ஆடலூரில் பூத்துக் குலுங்கும் கோழி அவரை

தாண்டிக்குடி: தாண்டிக்குடி அருகே ஆடலூர் பகுதியில் கோழி அவரை நடவு செய்யப்பட்டு தற்போது பூ பூத்துள்ளது.

கடந்த சில ஆண்டுகளாக மலை விவசாயத்திற்கு மாற்றாக வெப்ப மண்டல பயிரான அவரை சாகுபடி பரப்பு அதிகரித்து வருகிறது. பருவ மழைக்கு பின் நடவு செய்யப்படும் அவரை தொடர்ந்து கோடை காலமான மார்ச், ஏப்ரலில் மகசூல் துவக்கி தொடர்ந்து நான்கு மாதங்கள் பலன் தருகிறது.

பெல்ட், யானை காது, கோழி அவரை வகை ரகங்கள் உள்ளன. ஆடலூர், கே.சி.பட்டி, பன்றிமலை, பெரியூர் பகுதியில் ஏராளமான ஏக்கர் பரப்பில் கோழி அவரை விவசாயம் செய்துள்ளனர். தகிக்கும் கோடை வெயிலில் பம்புசெட்மூலம் தண்ணீர் பாசனம் செய்கின்றனர். சுட்டெரிக்கும் வெயிலில் பந்தலில் படர்ந்துள்ள கோழி அவரை பூப்பூத்து அழகுற காட்சியளிக்கிறது.

விவசாயி ஒருவர் கூறுகையில், ""மற்றரகங்களை காட்டிலும் கோழி அவரை மார்க்கெட்டில் கூடுதல் விலை கிடைக்கும். வாரம் ஒருமுறை மருந்து தெளித்து நோய்களை கட்டுப்படுத்துகிறோம். பராமரிப்பு செலவினம் கூடுதல் என்ற நிலையில் மலை விவசாயத்தில் எதிர்பார்த்த மகசூலின்றி இவ்விவசாயத்தை செய்வதாக' கூறினார்.

## தேவாரம் விவசாயி தோட்டத்தில் "மெகா' சைஸ் மரவள்ளி கிழங்கு

தேவாரம்-: தேவாரம் பகுதியில் மரவள்ளி கிழங்கு அறுவடை தீவிரமாக நடக்கிறது. வழக்கத்தை விட நான்கு மடங்கு பெரிய கிழங்கு, விவசாயி மாணிக்கம் தோட்டத்தில் கிடைத்தது.

தேவாரம் பகுதியில் 3 ஆயிரம் ஏக்கருக்கு மேல் மரவள்ளி கிழங்கு சாகுபடி நடக்கிறது. நெல், வாழை பயிரிட்ட பகுதியில் நிலத்தடி நீர்மட்டம் சரிவு மற்றும் கூலி தொழிலாளர்கள் பற்றாக்குறையால் மரவள்ளி சாகுபடி நடக்கிறது.

2011-12ல் சேலம் "ஸ்டார்ச்' உற்பத்தியாளர்கள் கூடுதல் விலை கொடுத்து தேவாரத்தில் விளைந்த மரவள்ளி கிழங்கை கொள்முதல் செய்தனர். அந்த சீசனில் கூடுதல் விளைச்சல் இருந்ததால் விவசாயிகளுக்கு நல்ல வருவாய் கிடைத்தது. இதனால் மரவள்ளி சாகுபடி பரப்பு அதிகரித்தது. வெளிநாடுகளிலிருந்து குறைந்த விலையில் "ஸ்டார்ச்' இறக்குமதியானதால் மரவள்ளிக்கு போதிய விலை கிடைக்கவில்லை. ஒரு டன் ரூ. 10 ஆயிரமாக இருந்த மரவள்ளி விலை சரிந்து ரூ.3,500 வரை விற்பனையானது. இதனால் விவசாயிகள் பாதிப்படைந்தனர்.

மரவள்ளியை வாட்டு கப்பையாக மதிப்பு கூட்டி கேரளாவிற்கு அனுப்பினர். இதனால் கணிசமான லாபம் கிடைக்கிறது. தேவாரம் நாடார் வடக்கு தெருவை சேர்ந்த விவசாயி மாணிக்கம் தோட்டத்தில், அறுவடையின் போது வழக்கத்தை விட நான்கு மடங்கு பெரிய கிழங்கு தோண்டப்பட்டது. மாணிக்கம் கூறுகையில், ""இரண்டு ஏக்கரில் மரவள்ளி பயிரிட்டுள்ளேன். மற்ற பகுதியில் ஏக்கருக்கு 6 டன் கிழங்கு தோண்டப்படுகிறது. எனது தோட்டத்தில் 10 டன்னுக்கு மேல் அறுவடை செய்யப்பட்டது. வழக்கமாக கிழங்கு 1 அடி முதல் அதிகபட்சமாக 2 அடி வரை இருக்கும். எனது தோட்டத்தில் சில கிழங்குகள் 3 அடி நீளத்திற்கு மேல் உள்ளது. ஒரு கிழங்கு 4 அடி 2 அங்குலம் வளர்ந்துள்ளது,''

**மரக்கன்றுகள் நடவு**

மேட்டூர்: உலக வனநாளை முன்னிட்டு, மேட்டூரில் நேற்று மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டது. மேட்டூர் சப்-கலெக்டர் அலுவலகம் அருகே, சாலையோரம் நெடுஞ்சாலைத்துறை உதவி கோட்ட பொறியாளர் மலைச்சாமி மரக்கன்றுகளை நட்டார். மேட்டூர் மண்வள பாதுகாப்பு திட்ட வனசரகர் சரவண முத்து மற்றும் வனவர்கள் பங்கேற்றனர்.

**நாட்டுக்கோழி வளர்ப்பு பயிற்சி**

நாமக்கல்: 'வரும், 29ம் தேதி நாட்டுக்கோழி வளர்ப்பு குறித்த இலவச பயிற்சி முகாம் நடக்கிறது' என, நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத் தலைவர் அகிலா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, அவர் வெளியிட்ட அறிக்கை: நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில், வரும், 29ம் தேதி, காலை, 9 மணிக்கு, 'நாட்டுக்கோழி வளர்ப்பு' என்ற தலைப்பில், ஒரு நாள் இலவசப் பயிற்சி முகாம் நடக்கிறது. முகாமில், நாட்டுக்கோழி ரகங்கள், வளர்ப்பு முறைகள், தீவன அளவுகள், குஞ்சு பொரிக்கும் விதம், குஞ்சு பொரிப்பான்களின் பயன்கள் குறித்து விளக்கப்படுகிறது. மேலும், நாட்டுக்கோழிகளைத் தாக்கும் நோய்கள், அதன் அறிகுறிகள், அவற்றைத் தடுக்கும் வழிமுறைகள் குறித்தும், விரிவாக எடுத்துரைக்கப்படுகிறது. விருப்பம் உள்ளவர்கள், நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்துக்கு நேரில் வந்தோ அல்லது, 04286- 266 345, 266 650 என்ற தொலைபேசி எண்ணிலோ தொடர்பு கொண்டு, வரும், 28ம் தேதிக்குள் பெயரை முன்பதிவு செய்து கொள்ள வேண்டும். முதலில் முன்பதிவு செய்யும், 30 பேருக்கு மட்டும் பயிற்சி அளிக்கப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### முட்டை விலை உயர்வு 325 காசாக நிர்ணயம்



நாமக்கல் : நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை உயர்ந்து, 325 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாமக்கல்லில் தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணய குழு கூட்டம் நேற்று நடைபெற்றது. இதில் பண்ணையாளர்கள், வியாபாரிகள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் முட்டை விலையில் 10 காசுகள் உயர்த்தப்பட்டு, ஒரு முட்டையின் விலை 325 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது. கடந்த இரு தினங்களுக்கு முன் 15 காசு குறைக்கப்பட்ட நிலையில் தற்போது 10 காசு உயர்த்தப்பட்டுள்ளது. மற்ற மண்டலங்களில் முட்டை விலைக்கு ஏற்ப, இந்த மாறுதல் செய்யப்பட்டுள்ளதாக பண்ணையாளர்கள் தெரிவித்தனர். மற்ற மண்டலங்களின் முட்டை விலை (காசுகளில்): பெங்களூர் - 320, மைசூர் - 320, ஐதராபாத் - 300, மும்பை - 330, விஜயவாடா - 295, கொல்கத்தா - 332, பர்வாலா - 295, டெல்லி - 305, சென்னை - 325. அதே போல், ஒரு

கிலோ முட்டைக்கோழி விலை ரூ.55 ஆகவும், ஒரு கிலோ கறிக்கோழி ரூ.78 வும் விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

## மஞ்சள் மார்க்கெட் 13 நாள் விடுமுறை



ஈரோடு : கோயில் திருவிழாக்கள் மற்றும் தொடர் பண்டிகையையொட்டி இன்று முதல் 13 நாட்களுக்கு ஈரோடு மஞ்சள் மார்க்கெட்களுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. பண்ணாரி மாரியம்மன், ஈரோடு பெரியமாரியம்மன் கோயில் கிருவிமா, ஹோலிப்பண்டிகை, புனிதவெள்ளி உள்ளிட்டவைகளை முன்னிட்டு பெருந்துறை விற்பனை கூடம், மஞ்சள் வணிக வளாக ஈரோடு விற்பனை கூடம், ஈரோடு சொசைட்டி, கோபி சொசைட்டி ஆகிய 4 மஞ்சள் மார்க்கெட்களுக்கும் இன்று (22 ம் தேதி) முதல் அடுத்த மாதம் 3ம் தேதி வரை 13 நாட்களுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. அடுத்த மாதம் 4ம் தேதி மீண்டும் மஞ்சள் மார்க்கெட் செயல்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## எடுத்தனூர் பகுதியில் கத்தரிக்காய் பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம்

ரிஷிவந்தியம், : விழுப்புரம் மாவட்டம் ரிஷிவந்தியம் ஒன்றிய பகுதிகளான எடுத்தனூர், பெரியபகண்டை, ஏந்தல், யால் ஆகிய

பகுதிகளில் விவசாயிகள் கடந்த ஆறு மாதமாக பருவமழை பொய்த்து விட்டதால் இப்பகுதி விவசாயிகள் பிற மாநிலங்களில் கூலி வேலை செய்யும் நிலை உருவானது. கடந்த டிசம்பர் மாதம் பெய்த மழையால் ரிஷிவந்தியம் ஒன்றியம் பகுதிகளில் நீர்நிலைகளின் மட்டம் வெகுவாக உயர்ந்தது. இதன் காரணமாக விவசாயிகள் நெல், கம்பு, சோளம், கரும்பு பயிர்களுக்கு மாற்றாக குறைந்த முதலீட்டில் அதிக லாபம் தரும் உஜாலா, பவானி ஆகிய இரு ரக கத்தரிக்காய் பயிரிடுவதில் எடுத்தனூர் பகுதிகளில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

கத்தரி பயிரிட்ட இரண்டு மாதங்களில் பூ பூத்து காய் வைக்க ஆரம்பித்து விடுகிறது. பின்னர் வாரத்திற்கு இரு முறை கத்தரிக்காய் பறிக்கப்படுகிறது. மேலும் கத்தரி செடி பூ விடும் போது மட்டும் நோய் வராமல் தடுக்க பூச்சி கொல்லி மருந்து அடிப்பதில் அதிக கவனம் இருக்க வேண்டும் என்று விவசாயி தெரிவித்தார். இங்கு அறுவடை செய்யப்படும் கத்தரிக்காய் நேரடியாக சென்னை கோயம்பேடு மார்க்கெட்டில் விற்பனை செய்யப்படுவதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

## கொங்கணாபுரம் சந்தையில் 80 டன் காய்கறி விற்பனை

இடைப்பாடி, : கொங்கணாபுரம் சனி சந்தையில் நேற்று முன்தினம் 80 டன் காய்கறிகள் விற்பனையானது. சேலம் மாவட்டம், இடைப்பாடி அருகே கொங்கணாபுரத்தில் சனி தோறும் வாரச்சந்தை நடைபெறுகிறது. நேற்று முன்தினம் நடந்த சந்தையில் சேலம், தர்மபுரி, நாமக்கல், ராயக்கோட்டை மற்றும் பல்வேறு பகுதிகளில் இருந்து 4500க்கும் மேற்பட்ட ஆடுகள், 2 ஆயிரத்திற்கும் அதிகமான கோழிகள் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டிருந்தன. இதில் 10 கிலோ எடையுள்ள ஆடு ரூ.4,400 முதல் ரூ.4,600 வரையும், பந்தய சேவல் ரூ.700 முதல் 3000 வரையும், சின்னவெங்காயம் கிலோ ரூ.8 முதல் ரூ.12 வரையும், பெரிய வெங்காயம் ரூ.8 முதல் 12 வரையும், 30 கிலோ கூடை கொண்ட தக்காளி ரூ.70 முதல் ரூ.100க்கும், புளி ஒரு கிலோ ரூ.40 முதல் ரூ.50க்கு விற்பனையானது.

மொத்தம் 80 டன் காய்கறிகள் மற்றும் ஆடு, கோழி என 1.50 கோடிக்கு வர்த்தகம் நடைபெற்றது.

## தர்மபுரி மாவட்டத்தில் புடலங்காய் விளைச்சல் அமோகம் ஒரு கிலோ ரூ.10 ஆக சரிவு

தர்மபுரி : தர்மபுரி மாவட்டத்தில் புடலங்காய் விளைச்சல் அமோகமாக உள்ளது. இதனால் சந்தைக்கு புடலங்காய் வரத்து அதிகரித்துள்ளது. தர்மபுரி மாவட்டத்தில் 250 ஏக்கருக்கு மேல் புடலங்காய் பயிரிடப்பட்டுள்ளது. தர்மபுரி, நல்லம்பள்ளி, காரிமங்கலம், பாலக்கோடு, பென்னாகரம், மொரப்பூர், பாப்பிரெட்டிப்பட்டி, அரூர் ஆகிய பகுதிகளில் புடலங்காய் சாகுபடி செய்யப்படுகிறது. கொடி வகைத் தாவரமான புடலங்காய் பந்தல் அமைத்து சாகுபடி செய்யப்படுகிறது. ஒரு ஹெக்டேருக்கு 20 முதல் 25 டன் வரை மகசூல் கிடைக்கும். கடந்த சில நாட்களாக தர்மபுரி மாவட்டத்தில் புடலங்காய் விளைச்சல் அதிகரித்துள்ளது. இதனால் மார்க்கெட்டுக்கு வழக்கத்தைவிட அதிகளவில் விற்பனைக்கு வந்துள்ளது. கடந்த 2 வாரங்களுக்கு முன்பு ஒரு கிலோ ரூ.18 முதல் ரூ.25 வரை விற்பனை செய்யப்பட்ட புடலங்காய் தற்போது, ரூ. 10 முதல் ரூ. 15 வரை விற்கப்படுகிறது. புடலங்காயில் நீர்ச்சத்து இருப்பதாலும், கோடைகாலத்தில் வாங்கிச் சாப்பிட்டால் உடலுக்கு குளிர்ச்சி கிடைக்கும் என்பதாலும் மக்கள் விரும்பி வர்ங்கிச்செல்கின்றனர்.

இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில், பூசணி குடும்பத்தைச் சேர்ந்த புடலங்காய் வேகமாக வளரக் கூடியது. அதிக மகசூல் தரக்கூடியது. விதை ஊன்றிய 80 நாள்கள் கழித்து முதல் அறுவடை தொடங்கும். பின்னர் ஒரு வார இடை வெளியில் 6 முதல் 8 அறுவடை கிடைக்கும் என்றனர். இதுகுறித்து அதிகாரிகள் கூறுகையில், புடலங்காய் ஒரு வெப்ப மண்டலப் பயிர். இதன் சாகுபடிக்கு 25 முதல் 30 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை தேவைப்படும். இருமண் பாங்கான மண் வகைகள் சாகுபடிக்கு ஏற்றவை. மேலும் மித வெப்ப மண்டலப் பகுதிகளிலும் சாகுபடி செய்யலாம். நிலத்தை நன்றாக 3 அல்லது 4 முறை உழவு செய்ய

வேண்டும். கடைசி உழவின்போது 20 டன் மக்கிய தொழு உரத்தை இட்டு 2 மீட்டர் இடைவெளியில் 60 செ.மீட்டர் அகலத்தில் வாய்க்கால் எடுத்து நிலம் தயாரிக்க வேண்டும். அந்த வாய்க்காலில் 1.5 மீட்டர் இடைவெளியில் 45 செ.மீட்டர் நீளம், ஆழம், அகலம் கொண்ட குழிகளை எடுத்து மேல் மண் கலந்து நிரப்பி வைக்க வேண்டும். ஒரு ஹெக்டேருக்கு 1.5 முதல் 2 கிலோ விதையளவு தேவைப்படும் என்றார்.

**பூத்துக் குலுங்கும் செண்டி பூக்கள்**

புதுக்கோட்டை, : புதுக்கோட்டை மாவட்டம், வாகவாசல் அடுத்த தர்கா பகுதியில் 2 ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ள செண்டி பூக்கள் அறுவடைக்குத் தயாரான நிலையில் பூத்துக் குலுங்குவதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

வறட்சியின் பிடிக்கும் ஆளாகும் புதுக்கோட்டை மாவட்டத்தில் மாசி, பங்குனி, சித்திரை மாதங்களில் பூச்சொரிதல் உள்ளிட்ட பல்வேறு விழாக்கள் தொடர்ந்து ஏதாவது ஒரு ஊரில் நடத்தப்படுவது வழக்கம்.

இதற்காக அதிக அளவில் தேவைப்படும் பூக்களை கருத்தில்கொண்டு புதுக்கோட்டை அருகேயுள்ள வாகவாசல் அடுத்த தர்கா பகுதிகளில் உள்ள விவசாயிகள் சுமார் 2 ஏக்கர் பரப்பளவில் செண்டி பூ சாகுபடியில் ஈடுபட்டு வருகின்றனர். இதன்படி, நடப்பாண்டிலும் சாகுபடி செய்யப்பட்ட செண்டி பூக்களை மிகுந்த வறட்சியான சூழ்நிலையிலும் பம்ப் செட் மூலம் தண்ணீர் பாய்ச்சி, அவ்வப்போது களை எடுத்து அக்கறையுடன் வளர்த்து வந்தார். இதனால், அவை நன்கு வளர்ந்து தற்போது அறுவடைக்குத் தயாரான நிலையில் பூத்துக் குலுங்குகின்றன.

இதனால், இப்பகுதிக்குச் செல்வோர் காஷ்மீரில் நடைபெறும் மலர் திருவிழாவில் பங்கேற்ற பாங்கினை அடைகின்றனர். இம்மாவட்டத்தில் திருவிழா காலம் துவங்கியுள்ள நிலையில் அறுவடைக்கு ஆயத்தமாக உள்ள இந்த சென்டி பூக்களுக்கு நல்ல விலை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் விவசாயிகள் மகிழ்ச்சியுடன் உள்ளனர். இன்னும் அதிக அளவில் பூக்களை சாகுபடி செய்ய அரசு தங்களுக்கு தகுந்த உதவி செய்ய வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## இரண்டாம்போக அறுவடை விறுவிறு வைக்கோல் கொள்முதலில் ஆர்வம் காட்டும் கால்நடை வளர்ப்போர்

உத்தமபாளையம், உத்தமபாளையம் பகுதியில் நெல் அறுவடை தீவிரமடைந்த நிலையில், வைக்கோல் கொள்முதலில் கால்நடை வளர்ப்போர் தீவிர ஆர்வம் காட்டி வருகின்றனர்.கம்பம் பள்ளத்தாக்கில் உத்தமபாளையம், உ.அம்மாபட்டி, ராமசாமிநாயக்கன்பட்டி உள்ளிட்ட பல ஊர்களில் 2ம் போக நெல் அறுவடை தீவிரமாக நடந்து வருகிறது. பெரும்பாலும் அறுவடைக்கு இயந்திரங்களை பயன்படுத்துகின்றனர்.

தேனி மாவட்டத்தை பொறுத்தவரை விவசாயத்திற்கு அடுத்தபடியாக கால்நடைகளை வளர்க்கும் தொழில் முக்கிய தொழிலாக உள்ளது. கறவை மாடுகளை வளர்ப்போர் அறுவடை காலங்களில் வைக்கோலை கொள்முதல் செய்து 4 மாதம் வரை இருப்பு வைப்பர். இப்போது அறுவடை தீவிரமாக நடந்து வரும் நிலையில், கால்நடை வளர்ப்போர் விவசாயிகளிடம் இருந்து வைக்கோல் கொள்முதல் செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

விவசாயிகள் கூறுகையில், 'அறுவடை தீவிரம் அடைந்துள்ள நிலையில் வைக்கோல் வியாபாரம் அமோகமாக நடக்கிறது. இதனை கொள்முதல் செய்து கால்நடைகளை வளர்க்க கூடியவர்கள் இருப்பு வைப்பர். டிராக்டர்களிலும், மாட்டுவண்டிகளிலும் இதனை ஏற்றி செல்கின்றனர்' என்றனர்.

## மாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி

வருசநாடு, : கடமலை-மயிலை ஒன்றியத்தில் மாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணி தீவிரமாக நடந்து வருகிறது. கால்நடை மருத்துவர் வெயிலான் உள்ளிட்ட மருத்துவர்கள் கடமலை-மயிலை ஒன்றியத்தில் அனைத்து கிராமங்களுக்கும் சென்று மாடுகளுக்கு இலவச கோமாரி நோய் தடுப்பூசி போட்டு வருகின்றனர். நேற்று முன்தினம் மேகமலை ஹைவேவிஸ் பகுதியில் மாடுகளுக்கு தடுப்பூசி போடும் பணி நடைபெற்றது. இதுகுறித்து கால்நடை மருத்துவர்கள் கூறுகையில், 'கடந்த 20 நாட்களாக கடமலை-மயிலை ஒன்றியத்தில் அனைத்து

கிராமங்களிலும் மாடுகளுக்கு தடுப்பூசி போடும் பணி நடைபெற்று முடிந்துள்ளது. தடுப்பூசி போடாத மாடுகளை கணக்கெடுக்கும் பணி தொடங்கியுள்ளது. அடுத்து ஒரு வாரம் வரை விடுபட்டுள்ள மாடுகளுக்கு தடுப்பூசி போடும் பணிகள் நடைபெற உள்ளது என தெரிவித்தார்.

**வரத்து அதிகரிப்பால் மணக்காத மல்லிகை பூ**

கம்பம், : கம்பம் பகுதியில் வரத்து அதிகரிப்பால் மல்லிகை பூ கிலோ ரூ.100க்கு விற்பனை செய்யப்படுகிறது. இதனால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.கம்பம் பழைய பஸ் ஸ்டாண்டில் சுமார் 5க்கும் மேற்பட்ட மொத்த வியாபார பூ கடைகள் உள்ளன. இங்கு உசிலம்பட்டி, ஆண்டிபட்டி, திண்டுக்கல், பல்லவராயன்பட்டி, பொம்மிநாயக்கன்பட்டி, மேட்டுப்பட்டி, தேவாரம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து மல்லிகை, ரோஜா, கோழிக்கொண்டை, சம்பங்கி, கனகாம்பரம், அரளி, சென்டு உள்ளிட்ட பூக்கள் விற்பனைக்காக கொண்டு வரப்படுகின்றன. இங்கிருந்து அதிகளவில் கேரளாவிற்கும் சுற்றியுள்ள கிராமங்களை சேர்ந்த சில்லரை வியாபாரிகளுக்கும் பூக்கள் விற்பனை செய்யப்படுகிறது.

கடந்த 20 தினங்களுக்கு முன்பு கிலோ ரூ.800க்கு விற்பனை செய்யப்பட்ட மல்லிகை தற்போது வரத்து அதிகரித்துள்ளதாலும், திருமண விசேஷங்கள் இல்லாத காரணத்தாலும் கிலோ ரூ. 100க்கும் குறைவாக விற்பனை செய்யப்படுகிறது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.இது குறித்து வியாபாரிகள் சிலர் கூறுகையில், தற்போது வரத்து அதிகரித்துள்ளதாலும் திருமணம், கோயில் திருவிழாக்கள் உள்ளிட்ட விஷேச தினங்கள் இல்லாததாலும் ஒரு சில பூ வகைகளை தவிர மல்லிகை பூவின் விலை சரிவடைந்துள்ளது. இதனால் விவசாயிகளுக்கு போதிய லாபம் கிடைக்கவில்லை என்றனர்.

## மிளகாய் இன்சூரன்ஸ் தொகை தனி அலுவலரை நியமிக்க விவசாயிகள் கோரிக்கை

இளையான்குடி. : இளையான்குடி ஒன்றியத்தில் நடப்பாண்டில் 3ஆயிரத்து 560 ஹெக்டேரில் மிளகாய் விவசாயம் செய்யப்பட்டுள்ளது. பொதுவாக விவசாயப் பயிர்கள் வளரும்போதே அதற்கு இன்சூரன்ஸ் பதியப்பயடும். ஆனால், இளையான்குடி ஒன்றியத்தில் கடந்த செப்டம்பரில் பயிரிடப்பட்ட மிளகாய் செடிகளுக்கு இதுவரை இன்சூரன்ஸ் பதிய மாவட்ட கூட்டுறவு சங்க நிர்வாகம் நடவடிக்கை எடுக்கவில்லை.

கடன்பெறும் விவசாயிகளுக்கு தேவையான இன்ஸ்சூரன்ஸ் தொகை இளையான்குடி பகுதி கூட்டுறவு கடன் சங்கங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. தற்போது தேர்தல் விதிமுறைப்படி கூட்டுறவு கடன் சங்கத் தலைவர்களால் இந்த இன்சூரன்ஸ் பணப்பட்டுவாடா செய்யமுடியாததால், மிளகாய் இன்சூரன்ஸ் நிதி மத்திய கூட்டுறவு வங்கிகளில் முடங்கியுள்ளது.

கலெக்டரின் உத்தரவின் பேரில், தனி அலுவலரை நியமித்தால் மட்டுமே விவசாயிகளுக்கு இன்சூரன்ஸ் பதிந்து கடன் வழங்கப்படும் என கூட்டுறவு கடன் சங்க அலுவலர்கள் தெரிவித்துள்ளனர். விவசாயி ராமு கூறுகையில்," நடப்பாண்டில் மிளகாய் விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. கடன் பெறும் விவசாயிகளுக்குத் தேவையான நிதி முடங்கியுள்ளது. சரியான நேரத்தில் , உரிய இன்சூரன்ஸ் தொகை கிடைக்க கலெக்டர் தனி அலுவலரை உடனடியாக நியமிக்க வேண்டும்" என்றார்.

இன்றைய வேளாண் செய்திகள்

## 101.6 டிகிரி வெயில் கொளுத்தியதால் நுங்கு, இளநீர் விற்பனை விறுவிறுப்பு



தர்மபுரி மாவட்டத்தில் 101.6 டிகிரி வெயில் கொளுத்தியதால் சாலையோரங்களில் நுங்கு, இளநீர் விற்பனை விறுவிறுப்பாக நடந்து வருகிறது.

கோடை வெயில்

தமிழகம் முழுவதும் கோடை காலம் தொடங்கியுள்ள நிலையில், நாளுக்கு நாள் வெயில் அதிகரித்து வருகிறது. இதன் ஒருபகுதியாக தர்மபுரி மாவட்டத்தில் கடந்த 2 வாரங்களாக படிப்படியாக வெயில் அதிகரித்து

வருகிறது. கடந்த சில நாட்களாக வெயில் அளவு 100 டிகிரியை தாண்டியது. இதனால் பொதுமக்கள் பெரும் அவதிக்குள்ளாகினர். கோடை வெயில் அதிகரித்து உள்ளதால் பகல் நேரங்களில் சாலைகளில் பொதுமக்கள் நடமாட்டம் குறைந்து உள்ளது.

இந்த நிலையில் நேற்று தர்மபுரியில் 101.6 டிகிரி வெயில் கொளுத்தியது. இதனால் கோடை வெயிலை தணிக்க சாலையோரம் ஆங்காங்கே உள்ள கடைகளில் நுங்கு மற்றும் குளிர்பானங்களை வாங்கி சாப்பிட்டனர். கோடை வெயிலையொட்டி தர்மபுரி நகரில்சாலையோரம் தற்போது நுங்கு விற்பனை விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. கடந்த சில நாட்களாக தர்மபுரி நகரின் முக்கிய சாலைகளின் ஓரங்களில் நுங்கு விற்பனை செய்யப்படுகிறது. 3 நுங்குகள் ரூ.10-க்கு விற்பனை செய்யப்படுகிறது.

விற்பனை படுஜோர்

தர்மபுரியில் சாலையோரங்களில் நுங்கை சீவி விற்பனை செய்யும் பணியில் பெண்களே அதிக அளவில் ஈடுபட்டு வருகிறார்கள். உடலுக்கு குளிர்ச்சி தரும் நுங்கை பொதுமக்கள் அதிக அளவில் வாங்கி செல்கிறார்கள். மேலும் மாவட்டம் முழுவதும் ஆங்காங்கே சாலையோரம் மற்றும் கடைகளில் நுங்கு, இளநீர் மற்றும் குளிர்பானங்கள், கம்மங்கூழ், வெள்ளரி பிஞ்சு, முலாம் பழம் உள்ளிட்ட குளிர்பானங்கள் விற்பனை படுஜோராக நடைபெற்று வருகிறது.

சாலையோர நுங்கு வியாபாரிகள் தரப்பில் கூறுகையில், கோடை காலத்தில் ஏற்படும் அளவுக்கு அதிகமான உடல் சூட்டை தணிப்பதில் நுங்கு மிக முக்கிய பங்கு வகிக்கிறது. கடந்த சிலநாட்களாக நுங்கு சீசன் தொடங்கி உள்ளது. தர்மபுரி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகள் மற்றும் சேலம் மாவட்டம் மேச்சேரி பகுதியில் இருந்து நுங்கை விலைக்கு வாங்கி வந்து இங்கு விற்பனை செய்கிறோம். பொதுமக்கள் நுங்கை அதிக அளவில் வாங்கி செல்கிறார்கள். நுங்கு சீசன் இப்போதுதான் தொடங்கி உள்ளது. அடுத்த சில வாரங்களில் வரத்து அதிகரித்தால் விலை சற்று

குறைய வாய்ப்பு உள்ளது. இப்போது நுங்கு விற்பனையில் ஓரளவிற்கு லாபம் கிடைக்கிறது. இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.